(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1975 அக்டோபர் 25

பள்ளியை அரசு ஏற்றுக்கொள்கிறது என்ருல், 1966–67 ஆம் கல்வி யாண்டு முடியத்தான் அரசு வைத்துக்கொள்ள முடியும். மேலும் விரும்பிஞல் ஓராண்டு வரையிலும் அதாவது 1967–68 ஆம் ஆண்டு வரையிலும் வைத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்குத்தான் சட்டம் வகை செய்தது. இந்தத்திருத்த–செல்திறன் சட்டம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்குத்தான் கொண்டு வரப்படுகிறது. இதைக் கொண்டு வருவதன் முக்கிய காரணமே 1949–ஆம் ஆண்டு கல்வி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் எழும்பூரிலுள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியை அரசு எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எழும்பூர் உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரை அந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் அவதிக்கு உள்ளாவதாக புகார்கள் பல பொது மக்களிடமிருந்தும் வந்தன. அதை அடிப்படையாக வைத்துத்தான் அந்தப் பள்ளியையும் அதற்குண்டான சொத்துக்களையும் அரசு ஏற்றுக்கொண்டது. அதனுடைய காலக்கெடு 31–5–1975–ஆம் தேதியுடன் முடிந்து விடுகிறது. மறுபடியும் அந்தப் பள்ளியின் நிர்வாகத்தை நிர்வாகிகளிடம் ஏற்றுக்கொள்ளுமாறு அரசு சொன்ஞல் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. அந்தப் பள்ளிக்கூடத்தை அரசே ஏற்று மேலும் மூன்று ஆண்டுகளுக்குச் செம்மையாக நடத்து வதற்கு வழிவகை செய்வதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. தனியார் பள்ளி ஆசிரியர் பணி பாதுகாப்புச் சட்டதிலே கூட ஒழுங்காக நடக்காத பள்ளிக்கூடங்களை 5 ஆண்டுகள் வரை அரசு எடுத்து நடத்தலாம் என்று போட்டிருக்கிருேம். 1949–ஆம் ஆண்டு சட்டத்திலே 31–5–1975–க்குப் பிறகும் நீட்டிப்பதற்குஇடமில்லை. அதற்காகவே அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பாக்கியம் பிள்ளை என்ற நிர்வாகக் குழுவினர் அதைத் திரும்ப ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. சட்டப்படி ஒரு கல்வி ஆண்டுக்கு நடைமுறைப்படுத்துவதை நீட்டிக்கலாம். ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் அவதிக்கு உள்ளாவதுடன் பொது மக்களிடமிருந்தும் புகார்கள் வரக்கூடிய இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்பொருட்டு மேலும் மூன்று ஆண்டுகள் நீடிக்க இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. அதாவது மொத்தம் 5 ஆண்டுகள் நீட்டிக்க வழிவகை செய்யும். இந்தத் திருத்தச் சட்டத்தை இம்மாமன்றம் ஏற்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u>: அவை முன் உள்ள பிரச்சினை :

'சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975–ஆம் ஆண்டு, கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) திருத்த–செல்திறன் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.'

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

1975 அக்டோபர் 25] [திரு. மேலவை துணைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

'சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975–ஆம் ஆண்டு, கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) திருத்த–செல்திறன் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1975) நிறைவேற்றப்பட வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

'சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975–ஆம் ஆண்டு, கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிக கட்டுப்பாடு) திருத்த–செல்திறன் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1975) நிறைவேற்றப்பட வேண்டும்'.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1975).

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

'சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975–ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

பிற மாநிலங்களில் உள்ள முத்திரைத்தாள் தீர்வை வீதங்களை ஆய்வு செய்கையில் மகாராஷ்டிரம், கேரளம் முதலிய மாநிலங்களில், நகர்ப்புறங்களில் உள்ள இயங்காச் சொத்துக்களின் உரிமை மாற்றுப் பத்திரங்களுக்கும் மற்றச் சொத்துக்களின் உரிமை மாற்றுப் பத்திரங்களுக்கும் விதிக்கப்படும் முத்திரைத்தாள் தீர்வை வீதத்தில் வேறுபாடுகள் இருப்பது தெரிய வந்தது. நமது மாநிலத்தில் குறிப்பிட்ட

@ 196–198 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

 1975-ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1975).

நகர்ப்புறங்களான சென்னை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள இயங்காச் சொத்துக்களின் உரிமை மாற்றுப் பத்திரங்களுக்கு விதிக்கப்படும் முத்திரைத்தாள் தீர்வை வீதத்திலும் மற்ற சொத்துக்களுக்கு விதிக்கப்படும் முத்திரைத்தாள் தீர்வை வீதத்திலும் மேற்சொன்ன மாநிலங்களில் உள்ள அதே வேறுபாடுகளை இங்கும் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன நோக்கத்தை எய்த 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1899) I-வது விவர அட்டவணையைச் சேர்ந்த 23வது பிரிவைத் திருத்தவும் அதையொட்டித் தேவையான இடங்களில் சில திருத்தங்களைச் செய்யவும் ஓர் அவசரச் சட்டம் அதிகார முறையில் வெளியிடக் கருதப்பட்டுள்ளது. 1975, இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்தச்) சட்டத்தின்படி (தமிழ்நாடு அவசரச் சட்டம் 11/1975) அதிகார முறையில் வெளியிடப்பட்டு இந்த அவசரச் சட்டம் 1—8—1975 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தது. இந்தச்சட்ட முன்வடிவு மேலே கூறப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப் படுகிறது. இதனை இம்மாமன்றம் ஏற்க வேண்டுமெனக்கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:</u> முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1975ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இதைப் பொறுத்தவரை ஒரு கருத்து சொல்கிறேன். இப்பொழுது மாவட்டங் களிலே இந்த முத்திரைத்தாள் கிடைப்பதில்லை. இதனை விற்பதற்காக வெண்டர்களை தனியாக வைத்திருக்கிறோம். ஒரு இடத்தில் இருக்கக் கூடியவர்கள் இன்னொரு இடத்தில் இருப்பவர்களுக்கு அதிகமான விலைக்கு விற்றுவிடுவார்கள். யாராவது தேவைப்படுபவர்கள் வாங்குவ தற்காக இவர்களிடம் சென்று கேட்டால், இவர்கள் தங்களிடம் இல்லை, வெளியிலிருந்து வாங்கித் தருகிறோம் என்று சொல்லி, அதிகமான விலைக்கு விற்கிறார்கள். வாங்கவருபவர்களிடமிருந்து 25 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம் வரை அதிகமாக வாங்கிக்கொண்டு இரண்டு மூன்று நாள் அலைய வைத்து, அதற்குப் பிறகுதான் கொடுக்கும் நிலைமைகள் இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டு களாக இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்து வருவதாக எனக்குத் தெரிவித்தார்கள். அதை டிரெஷரியில் வாங்கலாமென்று சென்றால் அங்கும் கிடைப்பதில்லை. இவர்களையே நம்பி, கூடுதல் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அது போன்ற நிலைமைகள் நாட்டில் பரவலாக இருக்குமானால், மாண்புமிகு அமைச்சரவர்கள் இத்தருணத்தில் அதை ஆராய்ந்து அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5–40)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவரவர்களே, இந்த கருத்து உண்மையான கருத்து. இன்றைக்கு அல்ல, பல ஆண்டுக்கால மாகவே மக்களிடத்தில் இருக்கிற ஒரு குறை. பத்திரப் பதிவு மாத் திரம் அல்ல, நீதிமன்றம் செல்லும்போது Court Fee Stamp வாங்க என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அறிந்திருக் கிறோம். இதுபோன்ற கஷ்டங்களுக்கெல்லாம் யார் காரணம் என்று ஆராய்ந்துகொண்டேபோனால், அது டெல்லியிலேதான் போய் நிற்கிறது. ஆகவேதான் எங்களாலே ஒன்றும் செய்யமுடியாத நிலையில் இருக்கிறோம். இந்தப் பத்திரத்தைப் பொறுத்தவரையிலே, இதற்கு மாற்றுப் பரிகாரம் கொண்டுவரக்கூடாதா என்று நான் எதிர்க்கட்சியில் இருந்த போதே கேட்டேன். அதன்பின் இந்தத் துறையினுடைய பொறுப்பை நான் ஏற்றபோது, மாற்றுப் பரிகாரமாக, இடைக்காலத்திலே பணத்தை சப்–ரிஜிஸ்ட்ராரே வாங்கிக்கொண்டு அவரே அதற்கு அத்தாட்சி கொடுத்து விட்டால் பதிந்துவிடலாம், அப்படி இருந்தால் இந்தத் தொல்லை போய்விடும் என்ற ஒரு முறையை இந்த அரசாங்கம் கொண்டுவந்தது. இருந்தாலும் முழுமையாக எல்லா சப்–ரிஜிஸ்ட்ரார் அலுவலகங்களிலே யும் கொண்டுவரமுடியுமா என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதிலே, ஒரு சப்–ரிஜிஸ்ட்ராரை நம்பி, எவ்வளவு பணத்தை அவ ராகவே வாங்கச் சொல்லலாம் என்ற ஒரு பயத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் வேறு நாடுகளிலே பார்த்தேன், இந்த முத்திரைத் தாளே தேவையில்லை. டிரான்ஸ்பர் ஃபாரம் என்று ஒரு ஃபாரம் இருக்கிறது. அதிலே கையெழுத்துப் போட்டுவிட்டால், தன்னாலே உரிமை மாறிவிடும். ஆனால் அங்கே உள்ள அந்த முறைக்குக் காரணம் சொத்துக்களுடைய ஆதாரங்கள் எல்லாம் மிகவும் தெளிவாக இருக்கின்றன. ஆனால் நம் நாட்டிலே உள்ள சட்டப்படி, ஒருவருடைய சொத்தை யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும் விற்கலாம். அப்படி விற்றால், அந்தப் பதிவாளர் அதைப் பதிவு செய்ய வேண்டும். இதுதான் நம்முடைய நாட்டுச் சட்டம். இந்தச் சட்டம்தான் தொல்லை கொடுக்கின்றது. இதை நம்முடைய மாநிலத்தில் மட்டும் துணிந்து மாற்றலாமா என்றால், அப்படி ஒரு முடிவு எடுப் பதற்கும் அச்சமாக இருக்கிறது. அந்த நாடுகளில் உள்ள முறைகளை எல்லாம் நம்முடைய போர்டு மெம்பர் (சீனியர் ஆபிசர்) பார்த்து வந்து, அதைப் பரிசீலித்து, ஒரு அறிக்கையை அரசாங்கத்திற்குக் கொடுக்க இருக்கிறார்கள்.

அங்கே ஒவ்வொருவருடைய சொத்துக்கும் ஆதாரமாக இருக்கிற டாக்குமெண்டை அந்த நாட்டிலே கிராண்ட் என்று சொல்லுகிறார்கள். நம் நாட்டிலே பட்டா என்று சொல்லுகிறோம். **'Patta is not a title'** என்று நம்முடைய உயர்நீதிமன்றம் சொல்லிவிட்டது. அந்தப் பட்டா வெறும் காகிதமாக இருக்கிறது. அதிலேதான் குழப்பம். அதிலும் கர்ணத்தின் தயவை வைத்துத்தான் வாங்கவேண்டும். கர்ணம் தயவு ரொம்பக் கஷ்டம். அதற்குப் பின்னாலே அந்த விவசாயி, எந்தச் சொத்துக்கு வரி கொடுக்கிறார் என்பது அவருக்கே தெரியாது. அதை

வாங்குகிறவருக்கும் தெரியாது. இவ்வளவு குழப்பமான நிலைதான் நம்முடைய நாட்டிலே இருந்து வருகிறது. இதை மாற்றியமைத்து, ஒவ்வொரு சொத்துக்கும் இரண்டு ரெக்கார்டுகள் இருக்க வேண்டும். ஒன்று விவசாயிக்குக் கொடுத்துவிட வேண்டும். மற்றொன்று அரசிடத்தில் இருக்க வேண்டும். இந்த இரண்டு ரெக்கார்டுகளிலும் பதிவு செய்தால்தான் சொத்து மாறும். இந்த முறைதான் வெளிநாடுகளிலே இருக்கிறது. அந்த முறையைக் கொண்டுவரலாம் என்ற முறையில் அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அந்த அதிகாரியும் அவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்து, ஒரு அறிக்கையை அரசாங்கத்திற்குக் கொடுக்க இருக்கின்றார்கள், அப்படிப்பட்ட ஒரு முறைவந்தால், தைரியமாக நாம் சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்திலே அந்த முறையைக் கொண்டுவர முடியும். அதற்கிடையிலே, திரு. சுவாமிநாதன் சொன்னது போல், தீர்க்க முடியாத சிக்கல் எல்லாம் ஏற்படுகிறது. அடிக்கடி நாசிக்கிலே தகராறு வந்தால், நமக்கும் தகராறு ஏற்படுகிறது. அகில இந்தியாவிலே ஸ்டாம்ப் பஞ்சம் வந்தால், தமிழ்நாடு பாதிக்கப்படுகின்றது. ஆகவேதான் எப்போதைக்கெப்போது Shortage of stamp இருக்கிறதோ, அப்போதைக்கப்போது இந்த சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகங்களிலே பணம் கொடுத்துப் பதியலாம் என்ற முறையைத்தான் நம்மாலே இடைக்காலமாகப் பின்பற்ற முடிகின்றது. இதைத் தவிர வேறு பரிகாரம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை, அப்படி வேறு ஆலோசனைகள் இருக்குமானால், அவற்றைப் பரிசீலிப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

THIRU S. NARAYANASWAMY : May I suggest to the Hon. Minister one thing? In regard to share transfer where the amounts exceed a very large sum like Rs. 5,000, we have now the facility of paying the amount in the Treasury and getting the Collector to affix a rubber stamp on the Transfer Deed saying that stamp duty has been paid on that and that, therefore, it may be regarded as certificate of payment of stamp duty. Is it not possible to adopt the same method in regard to conveyances also? The Treasury Deputy Collector may be put in charge of this and after payment of the money, he may issue, not a Nasik Printing Press paper, but an ordinary paper in which he could affix a rubber stamp saying that so much of stamp duty has been paid in respect of that paper and such a paper could be used for the purpose of conveying the property. This work need not be entrusted to the Sub-Registrars but to the Collector or to somebody who is delegated with that power and who is in a higher level of fiscal responsibility and he will be able to handle this responsibility. He may be the Treasury Deputy Collector. The procedure of affixing rubber stamp in the case of share transfer may be followed in the case of transfer of other properties also.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவர் அவர்களே, துணைப் பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்ற இடங்களிலே பெரும்பாலும்

டிரஷரி இருக்க முடியாது. டாகுமெண்டைத் தயார்செய்து கொண்டு போய் கொடுத்தவுடன் இந்த சப்–ரிஜிஸ்ட்ரார்தான் அதற்கு எவ்வளவு ஸ்டாம்பு ஆகும் என்று நிர்ணயிக்கின்றார். அப்படி நிர்ணயித்ததற்குப் பின்னாலேதான், ஸ்டாம்ப் பேப்பரை கணக்குப்போட்டு எவ்வளவு என்று வாங்குகிறார்கள். டாக்குமெண்டு ரைட்டர் கெட்டிக்காரராக இருந்தால், அவரே எவ்வளவு ஸ்டாம்ப் வேண்டும் என்று சொல்லிவிடுவார். ஆகவே அதைத் தெரிந்துகொண்டு எழுத வேண்டும். அதன்பின் எங்கே டிரஷரி இருக்கிறதோ அங்கு போய்க் கொடுக்கவேண்டும். இது பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும். ஆகவேதான், சப்–ரிஜிஸ்ட்ராரே வசூல் செய்ய வேண்டுமென்று சொல்வதுதான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை: "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975–ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1975), பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு, எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதும் இல்லை.

மாண்புமிகு திரு செ. மாதவன் : துணைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975–ஆம் ஆண்டு இந்தியமுத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1975) திருப்பி யனுப்பபட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை: "சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1975) திருப்பி யனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) 1975ஆம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக் கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1975)